**Deposition of witness**
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No.43 /22
**Deposition of P.W.1**

Name : பால்ராஜ்

Father's Name : வடிவேல்

Village : அனவயல்

Age : **52/2022**

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 05.07.2022**

**முதல் விசாரணை**

நான் அனவயல் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் எலக்ரிக்கல்ஸ் கடை வைத்து நடத்தி வருகிறேன். எதிரிகள் விக்னேஸ்வரன், ராஜராஜன், சிவனேசன் ஆகியோர்களை எனக்கு தெரியும். நான் கீரமங்கலத்தில் விமல் என்பவருக்கு சொந்தமான கட்டிடத்தில் கடை வைத்து நடத்தி வருகிறேன். சுமார் **5** ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் மதியம் **12** மணிக்க நான் எனது கடையில் இருந்தபோது விமல் என்ற நபர் எனக்கு போன் செய்து எனது டிரைவர் விக்னேஸ்வரன் வருவார் அவரிடம் பைப்புகளை கொடுத்துவிடுங்கள் என்று போன்மூலம் தகவல் சொன்னார். நான் பைப்புகளை விக்னேஸ்வரனிடம் கொடுத்து அனுப்பினேன். அதன்பின்னர் **3** மாதம் கழித்து நான் விக்னேஷ்வரனுக்கு போன்செய்து பைப்புகளை எடுத்துச்சென்றதற்கு பணம் இன்னும் வரவில்லை என்று கேட்டேன். அதறக விக்னேஷ்வரன் பைப்புகளுக்கான பணத்தை நான் வாங்கிதந்துவிடுகிறேன். விமல் உங்களை கடையை காலி செய்யும்படி சொல்லிவிட்டார். நான் கடையை காலி செய்து அண்ணாநகரிலுள்ள எனது சொந்த இடத்தில் கடைவைத்துவிட்டேன். அதன்பின்னர் சுமார் **3** மாதம் கழித்து **20.02.2019** அன்று விக்னேஷ்வரனுக்கு போன்செய்து கடையை நான் காலிசெய்துவிட்டேன். பைப்புகளுக்கான பணத்தினை கொண்டுவருமாறு கேட்டேன். அதற்கு பதில் கூறாமல் எதிரி விக்னேஷ்வரன் எனது போனை துண்டித்துவிட்டார். அதன்பின்னர் மதியம் சுமார் **12.30** மணிக்கு நான் எனது கடையில் இருந்தபோது எதிரிகள் விக்னேஷ்வரன், ராஜராஜன், சிவனேசன் ஆகியோர் கடைக்கு வந்தனர். அப்போது எதிரி விக்னேஷ்வரன் என்னை தேவடியா புண்டாமகனே நீயெல்லாம் ஒரு ஆளு மயிறா என்று அசிங்கமாக திட்டி என்னை சேரிலிருந்து கீழே தள்ளிவிட்டார். அப்போது எதிரிகள் மூவரும் என்னை கையால் அடித்தனர். கீழே கிடந்த என்னை எனது கடையில் வேலைபார்க்கும் சங்கரன் தூக்கிவிட்டார். அப்போது பைப் கொள்முதல் செய்வதற்காக எனது கடையின் கல்லாவில் வைத்திருந்த ரூ.**50000/-** பணத்தை எதிரி விக்னேஷ்வரன் எடுத்துக்கொண்டு இதை வெளியில் சொன்னால் உன்னை கத்தியால் குத்திவிடுவேன் என்று மிரட்டி அருகில் இருந்தவர்கள் வருவதை பார்த்து எதிரிகள் மூவரும் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். என்னை என் கடையில் வேலைபார்க்கும் சங்கர் கீரமங்கலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார். பின்னர் அறந்தாங்கி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டேன். நான் அன்றைய தினமே கீரமங்கலம் காவல்நிலையத்தில் புகார் வாக்குமூலம் அளித்தேன். சாட்சியால் அளிக்கப்பட்ட புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.**1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர். நடந்த விபரம் கூறினேன்.

**எதிரி தரப்பில் கு.வி.**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி இருந்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.